# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

உலக தலைமையகம், செயின்ட் தாமஸ் சமூகம், குட்டப்புழா அஞ்சல்,
திருவல்லா - 689103 கேரளா, இந்தியா.

## மேய்ப்பனின் கடிதம்

மார்ச்-மே 2026

**என் அன்புக்குரிய மேய்ப்பர்களுக்கும், பரிசுத்த திருச்சபையின் விசுவாசிகளுக்கும்**

ஒன்றான மெய்தேவனான பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில்– ✠ ஆமென்.

என்றும் நம் நினைவில் வாழும் ஆவிக்குரியத் தந்தையான அதனெசியஸ் யோஹான்-1 மெட்ரொபாலிட்டனை நான் நினைவுகூறுகிறேன். அவர் நம்மிடம், “எப்போதும் திருச்சபையையே சிந்தியுங்கள்” என்று கூறுவார். அவர் சொல்லியதாவது, இந்த பூமியில் நாம் கட்டியெழுப்பக்கூடிய நிலையான நிஜமான ஒன்று உண்டு என்றால் அது திருச்சபை மட்டுமே.

அன்பான பிள்ளைகளே, நீங்கள் தான் திருச்சபை – கிறிஸ்துவின் ஜீவனுள்ள சரீரம். நீங்கள் அங்கத்தினரான ஸ்தலத்திருச்சபை என்பது ஒரு நிறுவனமோ அமைப்போ அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது பேராயரையும், குருவானவரையும் சூழ்ந்து, பரிசுத்த ஆவியில் ஒற்றுமையாக, பரிசுத்த வேதாகமத்தாலும், பரிசுத்த திருவருட்சாதங்களாலும் (சக்ரமெண்ட்கள்) வளர்க்கப்படும் விசுவாசிகளின் சமூகமாகும். ஸ்தலத்திருசபையில்தான் நாம் தொடர்ந்து கிறிஸ்துவை சந்திக்கிறோம், தேவனுடைய சுபாவத்தில் வளர்கிறோம், வார்த்தையிலும், செய்கையிலும் சுவிசேஷத்தை வாழ உக்கப்படுத்தப்படுகிறோம்.

அதனால் 2026 ஆம் ஆண்டிற்கான நமது திருச்சபையின் தரிசனம்:
**‘ஸ்தலத்திருச்சபையை கட்டியெழுப்புதல்:** இந்த தரிசனத்தில் மூன்று அம்சங்கள் உண்டு, அவை: **‘விசுவாசம், வாழ்க்கை, சேவை’**, அவற்றை நாம் எவ்வாறு நடைமுறையில் வாழலாம் என்பதையும் சுருக்கமாக விளக்குகிறேன்.

### 1) விசுவாசம் (FAITH)

ஒரு பெரிய மரமாக உங்கள் ஸ்தலத்திருச்சபையை கற்பனை செய்யுங்கள். மரத்தின் வேர் விசுவாசம் ஆகும். அது மரத்தை உறுதியாக நிலைநிறுத்தி, அதற்கு உணவு அளிக்கிறது. அதேபோல், பரிசுத்த விசுவாசமே திருச்சபைக்கும் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் அடித்தளம் ஆகும்.

a) பரிசுத்த விசுவாசம் என்பது ஒருவரின் தனிப்பட்ட கருத்து அல்ல. அது அப்போஸ்தலர்களால் நமக்கு அளிக்கப்பட்டு, ஆதிகால சபைபிதாக்களால் உறுதிப்படுத்தப்பட்டு, பரிசுத்த சபையின் வாழ்க்கையில் காக்கப்பட்டு வந்த விசுவாசம் ஆகும். இந்த சுவிசேஷமும், விசுவாசமும், அப்போஸ்தலர்களால் கொடுத்தபடியே காக்கப்படும் போது மட்டுமே உண்மையாக இருக்கும். கலாத்தியர் 1:8-ல் பரி. பவுல் எழுதுகிறார்: “நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற

ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்..” இது பரிசுத்த விசுவாசத்தின் ஆழத்தையும் முக்கியத்துவத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது.

b) 1 தீமொத்தேயு 3:15-16-ல், பரிசுத்த திருச்சபை “சத்தியத்தின் தூணும் ஆதாரமும்” என்று விவரிக்கப்படுகிறது. இங்கே திருச்சபை தேவனுடைய குடும்பமாக விளங்குகிறது; சுவிசேஷத்தின் சத்தியத்தை நிலைநிறுத்தவும், காக்கவும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அடுத்த வசனம் “தெய்வபக்தியின் இரகசியம்” – மனிதனாக வெளிப்பட்ட இயேசு கிறிஸ்து – என்பதை எடுத்துக்காட்டுகிறது. இது கிறிஸ்தவ விசுவாசத்தை சுத்தமாகவும் கலப்படமின்றியும் காக்கும் திருச்சபையின் பொறுப்பை வெளிப்படுத்துகிறது.

c) 2 தீமொத்தேயு 1:5ல், பரி. பவுல் தீமொத்தேயுவின் பாட்டி லோவிசாளுக்குள்ளும் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் இருந்த “உண்மையான விசுவாசத்தை” நினைவுபடுத்துகிறார். அதுபோலவே, இந்த பரிசுத்த விசுவாசம் நமது வீடுகளில் நிலைத்து, அடுத்த தலைமுறைக்கு உண்மையுடன் வழங்கப்பட வேண்டும்.

**2) வாழ்க்கை (LIFE)**

வாழ்க்கை என்பது மரத்தின் உடல் – அதன் தண்டு, கிளைகள், இலைகள். ஒரு ஸ்தலத்திருச்சபையின் வாழ்க்கை, என்பது நாம் தினமும் எவ்வாறு நமது விசுவாசத்தில் வாழ்கிறோம் என்பதில் வெளிப்படுகிறது.

a) இந்த வாழ்க்கையின் மையத்தில் தெய்வீக வழிபாட்டுமுறையின் உண்மையான ஆரதனை உள்ளது. நாம் வாரந்தோறும் பரிசுத்த பலிபீடத்தைச் சுற்றி கூடுகிறோம்; கிறிஸ்துவிடமிருந்து பெலனும் போஜனமும் பெறுகிறோம். திருச்சபையின் காலண்டரைப் பின்பற்றி உபவாசங்களையும் திருநாள்களையும் பக்தியுடனும், ஒன்றுபட்ட மனதுடனும் கடைப்பிடிக்கிறோம். இவ்வாறு பரிசுத்த இரகசியங்கள் நமது ஆராதனையின் இருதயமாக இருக்கின்றன.

b) இந்த வாழ்க்கை நமது வீடுகளிலும் வெளிப்பட வேண்டும். நமது குடும்பங்கள் சிறிய சபைகளாக மாற வேண்டும். ஜெபமானது தினசரி வாழ்க்கையின் ஒரு இயல்பான பகுதியாக இருக்க வேண்டும். காலை, மாலை ஜெபங்கள், வேதாகம வாசிப்பு, தேவனின் சந்நிதியில் அமைதியான சிந்தனை ஆகியவற்றை நாம் நிறுவ வேண்டும்.

c) நமது கிறிஸ்தவ வாழ்க்கை, நாம் வாழும் சமூகங்களிலும் காணப்பட வேண்டும் – பள்ளி, கல்லூரி, வேலை இடங்கள், நாம் பேசும் வார்த்தைகள், நாம் பேணும் உறவுகள், நாம் நடந்து கொள்கிற விதம் ஆகிய அனைத்திலும். நமது வாழ்க்கை கிறிஸ்துவை பிரதிபலிக்க வேண்டும்; ஏனெனில் பல நேரங்களில் நமது வாழ்க்கையே, வார்த்தைகளை விட வலிமையாக பேசுகிறது.

**3) சேவை (SERVICE)**

சேவை என்பது மரத்தின் கனியாகும்; அது நமது விசுவாசமும் ஆவிக்குரிய வாழ்க்கையின் வெளிப்படையான பலனாகும். ஒரு கிறிஸ்தவன் விசுவாசத்தை செயலில்காட்டி வாழ்பவராக இருக்க வேண்டும்.

a) தெய்வீக ஆராதனையின் முடிவில் நாம் ஆசீர்வதிக்கப்பட்டு, வார்த்தையிலும் செய்கையிலும் தேவனைச் சேவிக்க அனுப்பப்படுகிறோம். இதுவே நமது அழைப்பு –

அயலகத்தாரையும், சமூகத்தையும் சுவிசேஷத்தால் கண்டறிதல். ஆரம்ப கால சபைப்பிதாக்கள் இதை "தெய்வீக வழிபாட்டிற்கு பிறகான வழிபாடு" என்று கூறினர்.

b) தேவனுடைய பிள்ளைகளாக, நாம் இரக்கம் மற்றும் அன்பின் செயல்களால் சுவிசேஷத்தில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்: ஏழைகள், விதவைகள் ஆகியோரைக் கவனித்தல்; பின்தங்கிய குழந்தைகளை கல்வியால் ஆதரித்தல்; தேவையுள்ளவர்களுக்கு கருணை காட்டுதல்; தேவனுடைய படைப்புகளுக்கு பொறுப்பான பாதுகாவலர்களாக இருப்பது போன்றவை.

இந்த பெரிய தவக்காலத்திலும் அதற்குப் பிறகும், 'ஸ்தலத்திருச்சபையை கட்டியெழுப்புதல்: விசுவாசம், வாழ்க்கை, சேவை' என்ற தரிசனம் நமக்கு தெளிவான பாதையை வழங்குகிறது. இந்த தரிசனம் பலனளிக்க, பேராயர்கள், குருவானவர்கள், விசுவாசிகள் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடனும், பொறுமையுடனும் இதை ஏற்க வேண்டும்.

விரைவில் பரிசுத்த தியோடொக்கோஸ் அறிவித்தல் பண்டிகையும், பின்னர் குருத்தோலை ஞாயிறையும் கொண்டாடுவோம். அதன் பின், கர்த்தரின் பாடுகளுடன் இணைந்து பயணிக்கும் பரிசுத்த வாரத்திற்குள் நுழைந்து, பஸ்கா (ஈஸ்டர்) அன்று அவரது மகிமையான உயிர்த்தெழுதலுடன் நிறைவடைகிறது.

என் அன்பான பிள்ளைகளே, இந்த பரிசுத்த தவக்கால நாட்களில் நான் உங்களை ஒவ்வொருவரையும் என் ஜெபங்களில் நினைக்கிறேன். உங்கள் ஆவிக்குரியத் தந்தையாக நான் பகிர்ந்தவற்றை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த உங்களை ஊக்குவிக்கிறேன். தயவுசெய்து பலவீனும், பாவியுமான என்னையும் தேவனுடைய சிங்காசனத்தின் முன் உங்கள் ஜெபங்களில் நினைவில் கொள்ளுங்கள்.

பரிசுத்த திரித்துவம்– பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்– தேவனுடைய சித்தத்தை அறிய உங்களுக்கு ஞானத்தையும், அவர் கட்டளைகளை கடைப்பிடிக்க வல்லமையையும், அவர் இரக்கத்தை பிரதிபலிக்க அன்பையும் தந்தருளுவாராக. மேலும் தேவனின் தாய் தியொடொகோஸின் பரிந்துரையும், அனைத்து பரிசு தவான்களின் பரிந்துரைகளும், இப்பொழுதும் எப்பொழுதும், தேவனுடைய சிங்காசனத்தின் முன் நமக்குக் காவலாக இருப்பதாக. ✠ ஆமென்.

கிறிஸ்துவில் உங்கள் ஆவிக்குரிய தந்தை

**மோரான் மோர் சாமுவேல் தியோபிலஸ்**
**மெட்ரோபாலிட்டன்.**

**தேதி:** 13 மார்ச் 2026

**இடம்:** உலக தலைமை செயலகம்